**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

கூட்ட எண். 27 நாள் 26.06.2018.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 29.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 29.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் மே/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

---

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சியின் 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்ட செலவினங்களுக்கு பொது அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

1) தினசரி நாளிதழ்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி, ஏலம், வரிவசூல், அரசின் திட்டங்கள் (ம) இதர நகராட்சி தொடர்புடைய விளம்பரங்களை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெளியீடு செய்வதற்கான கட்டணங்கள்.
2) நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வழக்கறிஞர் கட்டணம் செலுத்த.
3) இந்நகராட்சி பணி நிமித்தம் ஆணையாளர், பொறியாளர் மற்றும் இதர நகராட்சிப் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சி, அலுவலக பணி நிமித்தம் தொடர்பான பயணங்களுக்கான பயணப்பட்டியல்களுக்கான தொகை வழங்க.
4) பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணங்கள், திருமணக்கடன், சிறப்பு சேமநல நிதி மற்றும் நகராட்சி பங்கு தொகை – இதர அத்தியாவசிய முன்பணங்கள் வழங்குதல்.
5) நகராட்சி வரிவசூல் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடம் தெரிவிக்க ஆட்டோ, மைக் விளம்பரக்கட்டணங்கள் (ம) செலவினங்கள்.
6) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள்.

**அலுவலக குறிப்பு:– 2018–2019 ஆம் ஆண்டிற்கான மேற்காணும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 1344/2016/சி1)**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து திரு. N. குமரவேல் என்பவர் லஞ்ச ஒழிப்பு துறை மூலம் 18.06.2013–ல் கைது செய்யப்பட்டு தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் பிழைப்பூதியம் பெற்று வருகிறார். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.N.குமரவேல் என்பவர் WP–15041/2018-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்க 03.07.2018 அன்று விசாரணைக்கு வருகிறது. ஆகவே இவ்வழக்கில் ஆணையாளர் அரக்கோணம் நகராட்சி சார்பாக திரு. S.S. சுவாமிநாதன் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை ஆஜராகவும் வழக்கினை நடத்தவும் இவ்வழக்கிற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்காலம்.**

**ந.க.எண்.2055/2013/சி1**

**பொருள் எண் :04**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் நகரத்தை தூய்மை படுத்தவும் மற்றும் டெங்குகாய்ச்சல் தடுப்புபணிக்காக பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு தூள், மற்றும் பிளிச்சிங்

பவுடர், குறைந்த அளவே இருப்பு உள்ளதால் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கிருமிநாசினிகளான பிளிச்சிங் பவுடர் – 2 டன், மற்றும் நீர்த்த சுண்ணாம்பு தூள் – 4 டன்கள் கொள்முதல் செய்து கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | கிருமிநாசினி விவரம் | அரக்கோணம் கூட்டுறவு பண்டக சாலை V.V.2666 | ஜெய் ஸ்ரீ எலக்டிரிகல் & ஹாட்வேர்ஸ்,அரக்கோணம் |
|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு தூள் | ரூ.12.50 ஒரு கிலோ | ரூ.13.00 ஒரு கிலோ |
| 2. | பிளிச்சிங் பவுடர், | ரூ.30.00 ஒரு கிலோ | ரூ.30.60 ஒரு கிலோ |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **அரக்கோணம் கூட்டுறவு பண்டக சாலை V.V.2666**, அவர்களுக்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.1,50,000/–க்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் குறைந்த அளவே இருப்பு உள்ளதால் பொதுசுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோரய செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கும், மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண் :05**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்களை ஜீன் 2018ம் மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 329 நாள்28.03.2018–ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 18.06.2018 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் தொடர்ந்து DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 01.07.2018 முதல் 30.09.2018 மாதம் வரை தொடர்ந்து 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே பணி செய்து வரும் மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் தொடர்ந்து பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று 85 DBC பணியாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதற்கும்,மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 061/எச்1/2017)**

---

**பொருள் எண் :06**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே2 நாள் 16.05.2018.ல் அரசாணை (2D) எண் 62, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(ஜே1)துறை நாள் 11.10.2017 நகலினை அனுப்பி வைத்து மாநகராட்சி/நகராட்சிகளில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் அவர்களுக்கு மேற்படி அரசாணையின்படி ஊதியம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாணை (2D) எண் 62, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(ஜே1)துறை நாள் 11.10.2017 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**

---

**பொருள் எண் :07**

இந்நகராட்சியில் A,B,C, பிரிவுகளில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் கீழ்காணும் லாரிகளின் டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் லாரிகளை இயக்க சிரமமாக உள்ளது. எனவே பொதுசுகாதார நலன் கருதி புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளியின்படி தோராய செலவினம் ரூ.3.25 இலட்சத்திற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | FRONT | BACK | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | TN73W2316 | TIPPER LORRY | 2 | 2 | **4** |
| 2 | TN23AS6296 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 3 | TN23AS6307 | TIPPER LORRY | 2 | 2 | **4** |
| 4 | TN73V5358 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 5 | TN73W2299 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 6 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | - | 2 | **2** |
| 7 | TN73V9270 | DOG TRAVELLING VEHICLE | 2 | 2 | **4** |
| 8 | TN23X 6607 | TIPPER LORRY | 2 | 4 | **6** |
| | | | | **Total** | **32** |

**அலுவலக குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண் 1374/எச்1/2018)

---

**பொருள் எண் :08**

இந்நகராட்சியில் A,B,C, பிரிவுகளில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் லாரிகளின் டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | டயர்கள் எண் விவரம் | MRF VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM ஒன்றின் விலை | P.K.TYRES ARAKKONAM ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 1 | 825 X16 - FRONT | 8800 | 8850 |
| 2 | 825 X16 - BACK | 9750 | 9800 |
| 3 | 145 X 12 | 2350 | 2600 |
| 4 | 16.9 X 28 JCB BACK | 28000 | 33500 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய MRF TYRES VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவின தொகை ரூ.3.25 லட்சம் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவின தொகை ரூ.3.25 லட்சம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1374/எச்1/2018)**

---

**பொருள் எண் :09**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற வாகனங்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தால் வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. 1650/- வீதம் ஜீன் 2018 மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 330 நாள் 28.03.2018 ல் அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 01.07.2018 முதல் 31.07.2018 வரை ஒரு மாதம் மட்டும் ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 0.60 லட்சத்திற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : நகரமன்ற தீர்மான எண் 330 நாள் 28.03.2018 ல் ஒரு வாடகை டிராக்டரை 30.06.2018 வரை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டதை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்துக்கொள்ளவும் (01.07.2018 முதல் 31.07.2018 வரை) அதற்கான தோராய செலவினம் ரூ. 0.60 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்919/எச்1/2015)**

---

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சி **2018–2019** ஆம் ஆண்டிற்கான ஒப்பந்த அடிப்படையில் **8** ஓட்டுநர்கள் Out Sourcing முறையில் ஓட்டுனர் பணியில் ஈடுபடுத்த நகரமன்ற தீர்மானம் எண்.**297** நாள்.**2802.2018** அனுமதி பெறப்பட்டு தினகுரல் தமிழ் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டு **28.03.2018** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றைய தினம் நிர்வாக நலன் கருதி தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. எனவே Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் பணி உத்திரவு **31.03.2018** தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 6 ஓட்டுனர்களை வழங்கி வரும் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் ஏப்ரல் முதல் ஜீன் 2018ஆம் மாதம் வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 335 நாள் 30.04.2018 தேதியில் தோராய செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர், எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 6 ஓட்டுனர்களை வழங்கி வரும் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் 01.07.2018 தேதி முதல் 31.08.2018 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ.3.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதியும், 01.07.2018 முதல் 31.08.2018 வரை 6 ஓட்டுநர்களை பயன்படுத்தி கொள்ளவும், உத்தேச செலவின தொகை ரூ.3.00/–லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

---

**பொருள் எண் :11**

அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணிபுரியும் திரு.A.நாகராஜன் என்பவர் **18.04.2018** முதல் அரக்கோணம் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் தனியர் தனது **26.06.2018** ஆம் தேதிய விண்ணப்பத்தில் குடும்ப சூழ்நிலைக் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்ய பரிந்துரை செய்யக்கோரியுள்ளார் எனவே அரக்கோணம் நகராட்சியிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரும் தனியரின் விண்ணப்பத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்1618/2018/சி1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**அரக்கோணம் நகராட்சி**

**29.06.2018 அன்று நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் மன்ற தீர்மான எண். 369 ன்உண்மை நகல்**

அரக்கோணம் நகராட்சியின் 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்ட செலவினங்களுக்கு பொது அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

7) தினசரி நாளிதழ்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி, ஏலம், வரிவசூல், அரசின் திட்டங்கள் (ம) இதர நகராட்சி தொடர்புடைய விளம்பரங்களை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெளியீடு செய்வதற்கான கட்டணங்கள்.

8) நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வழக்கறிஞர் கட்டணம் செலுத்த.

9) இந்நகராட்சி பணி நிமித்தம் ஆணையாளர், பொறியாளர் மற்றும் இதர நகராட்சிப் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சி, அலுவலக பணி நிமித்தம் தொடர்பான பயணங்களுக்கான பயணப்பட்டியல்களுக்கான தொகை வழங்க.

10) பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணங்கள், திருமணக்கடன், சிறப்பு சேமநல நிதி மற்றும் நகராட்சி பங்கு தொகை – இதர அத்தியாவசிய முன்பணங்கள் வழங்குதல்.

11) நகராட்சி வரிவசூல் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடம் தெரிவிக்க ஆட்டோ, மைக் விளம்பரகட்டணங்கள் (ம) செலவினங்கள்.

12) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள்.

**அலுவலக குறிப்பு:– 2018–2019 ஆம் ஆண்டிற்கான மேற்காணும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 1344/2016/சி1)**
**மன்ற தீர்மான எண்.369 நாள் 29.06.2018.**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திருமதி.கோ.கமலகுமாரி,பி.ஏ.,**

**ஆணையாளர் (ம)தனி அலுவலர்**

**அரக்கோணம் நகராட்சி**

**- உண்மை நகல் -**

**மேலாளர்**

**அரக்கோணம் நகராட்சி**